**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI</u>**

**STC No**.804/2022 **Date**:21-09-2024

**<u>வா.சா.1 – மோகன்ராஜ், த/பெ.அரும்பன்,</u>**

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்).**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். காசோலையை நான் தான் பூர்த்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல, எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார். எதிரி என்ன படித்துள்ளார் என்றால் தெரியவில்லை. எதிரிக்கு கையொப்பம் மட்டும் தான் செய்ய தெரியும் என்றும், வேறு எதுவும் படிக்கவும்/எழுதவும் தெரியாது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. காசோலையில் எதிரி என்ன எழுதி என்னிடம் கொடுத்தார் என்றால் காசோலை தொகையை எண்களாளும், எழுத்தாலும் பூர்த்தி செய்து அதில் கையொப்பம் செய்து என்னிடம் கொடுத்தார்.

2) எதிரி காசோலையில் என்ன எழுதிக் கொடுத்தார் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் கையொப்பம் செய்து தொகையை மட்டும் எழுதி கொடுத்தார், வேறு என்ன எழுதினார் என்று எனக்கு தெரியாது. ஜெயபிரகாஷ் என்பவர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் எனது நண்பர் ஆவார். ஜெயபிரகாஷ் என்பவர் எதிரி மீது சேலத்தில் காசோலை வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஜெயபிரகாஷ், என்பவர் சேலத்தில் எதிரி மீது எவ்வளவு தொகைக்காக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் நான் தொகையை கொடுக்கும்போது அவர் வீட்டில் 4 தறிகளை வைத்து தொழில் செய்து வந்தார், அவர் சமையல் வேலைக்கும் சென்று வருகிறார். எதிரியிடம் தறிகள் இல்லை என்றும், எதிரிக்கு சொந்தமாக தறிகள் இருந்தால் அவர் கூலி வேலைக்கு செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் எனது சித்தப்பா நடத்தி வரும் கம்பெனியில் சூப்பர்வைசராக பணியாற்றி வருகிறேன். எனது மாத வருமானம் என்ன என்றால் ரூ.40,000/-ம் முதல் ரூ.50,000/-ம் வரையாகும்.

4) நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் இல்லை. நான் வேலை பார்த்து வரும் எனது சித்தப்பா நடத்தி வரும் கடைக்கு முறையான உரிமம் பெற்று வரி செலுத்தி வரும் நிறுவனம் என்றால் சரிதான். அந்த கடைக்கு எந்த வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் பெடரல் பேங்க், ஆட்டையாம்பட்டி கிளையில் கணக்கு உள்ளது. கம்பெனி தொடர்பான பரிவர்த்தனைகளை வங்கி மூலமாக தான் எனது சித்தப்பா செய்வார் என்றால் இல்லை, சில நேரங்களில் வங்கி மூலமாகவும், சில நேரங்களில் கைமாற்றாகவும் பரிவர்த்தனை செய்வார்.

5) நான் எத்தனை வருடங்களாக அந்த கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் என்றால் 2016 ம் ஆண்டிலிருந்து வேலை செய்து வருகிறேன். எனக்கு மாத வருமானம் வங்கி பரிவர்த்தனை மூலம் வருமா என்றால் இல்லை, கையில் தான் எனது சித்தப்பா சம்பளத்தை கொடுப்பார். அதற்கான ரசீதை அவர் Stamp ஒட்டி பெற்றுக் கொள்வாரா என்றால் இல்லை. எனது சித்தப்பா வருமான வரி செலுத்தி வருகிறாரா என்றால் செலுத்தி வருகிறார். எனது சித்தப்பா நடத்தி வரும் நிறுவனத்தின் 2000 ம் ஆண்டு முதல் 2024 ம் ஆண்டு வரையிலான வருமான வரி கணக்குகளை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளேனா என்றால் தயராக உள்ளேன். எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தாரா என்றால் இல்லை **(எதிரி தரப்பு வழக்கறிஞர் தன்னிடமிருந்த 26.12.2021 ம் தேதியிட்ட ஒரு வழக்கறிஞர் அறிவிப்பின் நகலையும், 22.12.2021 ம் தேதியிட்ட ஒரு வழக்கறிஞர் அறிவிப்பின் நகலையும் சாட்சியிடம் காண்பித்து அது குறித்து தெரியுமா என்று சாட்சியிடம் கேட்டபோது அதற்கு சாட்சி தெரியாது என பதிலளித்தார்).**

6) எனக்கும், எதிரிக்கும் கொடுக்கல்/வாங்கல் பிரச்சனை ஏற்பட்டு அது குறித்து எதிரியின் மகன் என்மீது ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார், என்னுடன் சேர்த்து 18 நபர்கள் மீதும் புகார் கொடுத்திருந்தார். புகாரை எதிரியின் மகன் 3 வருடங்களுக்கு முன்னதாக கொடுத்தாரா என்றால் கொடுத்திருப்பார். அப்போது, பேச்சுவார்த்தை ஏற்பட்டு பணத்தை தருவதாக சமரசம் ஏற்பட்டதா என்றால் அவர் நிலத்தை விற்று பணம் தருவதாகவும், யாரும் பணம் குறித்து கேட்க வேண்டாம் எனவும் சொல்லி விசாரணை முடிக்கப்பட்டது. அஞ்சலக ஒப்புதல் அட்டையில் (வா.சா.ஆ.4) உள்ள கையொப்பம் எதிரியுடையதா என்றால் இல்லை.

7) நான் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை முறையாக அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடனை கொரான காலக்கட்டத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. 2021 ம் வருடம் நான் எதிரிக்கு கடனை கொடுத்தேன் என்றால் சரிதான். கடன் கொடுத்து 6 மாதத்தில் பிரச்சனை ஏற்பட்டு எதிரியின் மகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை, 1 வருடம் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்னர் எனக்கும், எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல, அதன்பின்னிட்டும் எதிரி வீட்டிற்கு வந்து செல்வார். நான் எதிரிக்கு கடன் கொடுத்த அன்றே காசோலையை பெற்றேனா என்றால் காவல்நிலையத்தில் தனது காட்டை விற்று பணம் தருவதாக சொன்னபின்னர் சில நாட்கள் கழித்து பணத்தினை திரும்ப கேட்டபோது காசோலை கொடுத்தார்.

8) சுரேஷ், என்பவருக்கு நான் எவ்வளவு தொகை கடன் கொடுத்தேன் என்றால் நான் சுரேஷ்க்கு கடன் தரவில்லை, எதிரிக்கு தான் கடன் கொடுத்தேன். நான் சொல்வது தவறு என்றும், நான் சுரேஷ், என்பவருக்கு தான் ரூ.100 க்கு ரூ.10 வட்டி வீதத்தில் கடன் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியின் மகன் தான் சுரேஷ் என்றால் சரிதான். நான் சுரேஷ்க்கு கடன் கொடுத்து தகராறு நடந்ததால் தான் என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, நான் தகராறு செய்யவில்லை ஊரில் உள்ள சுமார் 18 நபர்களிடம் கடன் வாங்கி அவர்கள் அனைவரின்மீதும் மனுதாக்கல் செய்து அதில் 3 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது, மற்ற எங்கள் அனைவரையும் பேசி அனுப்பி வைத்துவிட்டனர். அந்த 18 நபர்களில் ஜெயபிரகாஷ், என்பவர் இருந்தாரா என்றால் இல்லை.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய நேரம் கேட்டதால் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Witness (Sd)-Mohanraj

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.